எண்.108/2026 நாள்: 10.09.2026

**தமிழ் நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்**

**எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை - 600 003**

**செய்தி வெளியீடு**

ஒருங்கிணைந்த தொழில் நுட்ப பணிகள் தேர்வில் (பட்டயம்/ தொழிற்பயிற்சி நிலை) (அறிவிக்கை எண். 11/2024 மற்றும் அதன் பிற்சேர்க்கைகள்) அடங்கிய பதவிகளில், 9 பதவிகளுக்கான தேர்வு முடிவுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மேல்முறையீட்டு எண். 3782/2024-ல், 16.06.2026 அன்று பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், தேர்வர்களின் மதிப்பெண் மற்றும் தரவரிசை விவரங்கள் 07.07.2026 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகளில் (பட்டயம்/ தொழிற்பயிற்சி நிலை) அடங்கிய கீழ்கண்ட பதவிகளுக்கான பதினொன்றாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், எண். 3, தேர்வாணையச் சாலை, (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்) சென்னை - 600 003 ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் 22.09.2026 மற்றும் 23.09.2026 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது.

| | |
|---|---|
| **மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான பதவி குறியீடுகள்** | **Draftsman**: 3406,3407,3408,3409,3410,3411,3412,3413, 3415,3417,3418,3419,3421,3422,3423,3424, 3425,3426,3427,3428,3420,3414,3430,3431, 3429,3432,3438,3433,3434,3435,3436,3437, 3440,3442,3443,3439,2900,<br>**Draughtsman :** 3546,3649<br>**Draughtsman , Grade-III :** 3552 |
| **மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கான பதவி குறியீடுகள்** | **Surveyor cum Assistant Draughtsman : 3234** |

தேர்வர்களின் மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை எண் / இடஒதுக்கீட்டு விதி / காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் தற்காலிக

தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பதினொன்றாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கான நாள், நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய அழைப்புக்குறிப்பாணையினை தேர்வர்கள் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in – லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பதினொன்றாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களுக்கு அதற்கான விவரம் SMS மற்றும் E-mail மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கான அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பதினொன்றாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட தேர்வர்கள் எழுத்துதேர்வில் அவரவர் பெற்ற மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை / இடஒதுக்கீட்டு விதிகள் / விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மற்றும் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப மேற்படி பதவிகளுக்கான தெரிவு மேற்கொள்ளப்படும். எனவே, பதினொன்றாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் அனைவருக்கும் பணி வழங்கப்படும் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்வர்கள் மேற்படி பதினொன்றாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு வரத்தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

திரு. பானோத் ம்ருகேந்தர் லால், இ.ஆ.ப.,
செயலாளர்